ஊரடங்கின் போதும்

# மெட்ரோ ரெயிலில் 6 ஆயிரம் பேர் பயணம்

சென்னை, ஏப்.26-
முழு ஊரடங்கு நேற்று அமலில் இருந்ததால் பஸ் போக்குவரத்து முற்றிலும் ரத்து செய்யப்பட்டன.

குறைப்பு

மின்சார ரெயில் சேவையும், மெட்ரோ ரெயில் சேவையும் குறைக்கப்பட்டன. மெட்ரோ ரெயில்கள் காலை 7 மணி முதல் இரவு 9 மணி வரை மட்டுமே ஓடின.

விக்கோநகர் - விமானநிலையம் இடையே ஒரு மணி நேரத்திற்கு ஒரு சேவை இயக்கப்பட்டது. சென்ட்ரல்-விமான நிலையம், சென்ட்ரல்-பரங்கிமலை இடையே 2 மணி நேரத்துக்கு ஒருசேவையும் இயக்கப்பட்டது.

முகக்கவசம்

தனிமனித இடைவெளி, முகக்கவசம் அணிந்து பயணிகள் பயணம் மேற்கொண்டனர்.

ஆட்டோ, கார் போன்ற வாகனங்களும் ஓடாததால் சென்னை நகரம் வெறிச்சோடி காணப்பட்டது. இதனால் மின்சார ரெயில், மெட்ரோ ரெயில் நிலையத்திற்கு பொதுமக்கள் செல்ல முடியாமல் கஷ்டப்பட்டனர்.

6 ஆயிரம் பேர்

விமான நிலையம் செல்லக்கூடியவர்கள் மட்டுமின்றி அவசரபயணம்மேற்கொள்ளக்கூடியவர்களும் மெட்ரோ ரெயிலில் சென்றனர்.

ஊரடங்கு காலத்திலும் மெட்ரோ ரெயிலில் 6 ஆயிரம் பேர் பயணம் செய்ததாக மெட்ரோ ரெயில் நிர்வாகம் தெரிவித்துள்ளது.